# சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆபத்தான / இடையூறாக உள்ள மரங்களை அகற்றுவதற்கான விதிமுறைகள்

## பகுதி - I

தனியார் நிறுவனத்திற்கு பகுதிகளில் உள்ள ஆபத்தான மரங்கள் கிளைகள் அகற்றுதல்:

1. தனியாருக்கு சொந்தமான பகுதிகளில் உள்ள மரங்கள் / மரக்கிளைகள் உயிருக்கும் உடைமைக்கும் ஆபத்து விளைவிக்கும் நிலையில் இருப்பது கண்டறியப்பட்டால் சென்னை மாநகராட்சி ஆணையர் சம்மந்தப்பட்ட நபர் / நிறுவனத்திற்கு அகற்றக்கோரும் தாக்கீது 1919 ஆம் ஆண்டு MCMC சட்டம் 259ம் பிரிவின்பட வழங்கப்படும். மனுதாரர்/ நிறுவனம் தாங்களாக முன்று நாட்களுக்குள் அப்புறப்படுத்தப்படாத நிலையில் சென்னை மாநகராட்சியே முன்னின்று அகற்றும். பின்னர் அதற்கு ஆகும் செலவுத் தொகையை சம்மந்தப்பட்ட நபர் / நிறுவனத்திடமிருந்து முறைப்பட வசூலிக்கப்படும்.

## பகுதி - II

பொதுச்சாலைகள் தெருக்களில் இடையூறு ஆபத்தான நிலையில் உள்ள மரங்களை அகற்றுதல்:

1. பொதுச்சாலைகள் / தெருக்களில் ஆபத்தான / இடையூறாக உள்ள உயிருடன் / காய்ந்த மரங்களை அகற்ற இணைப்பில் உள்ள படிவத்தில் சம்மந்தப்பட்ட மண்டல அலுவரிடம் புகைப்படத்துடன் விண்ணப்பிக்கலாம். (இணைப்பு-1)
2. பெறப்பட்ட மனுவை மண்டல அலுவலர் 24 மணி நேரத்திற்குள் சம்மந்தப்பட்ட கோட்டத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.
3. சம்மந்தப்பட்ட கோட்ட பொறியாளர் மற்றும் பூங்கா பணிப்பாவையாளர் ஆகியோர் சேர்ந்து களஆய்வு செய்து அதன் அறிக்கையை பகுதி உதவி செயற் பொறியாளர், மண்டல செயற்பொறியாளர், வட்டார மேற்பார்வை பொறியாளர் வழியாக வட்டார துணை ஆணையர் அவர்களுக்கு 3 நாட்களுக்குள் சமர்ப்பிக்கபடும். மரம் மாற்றி நடுவது மற்றும் புதியதாக 10 மரங்கள் நடுவதற்கான சாத்திய கூறுகளை அறிக்கையாக தெரிவிக்கப்படும்.
4. வட்டார துணை ஆணையர் அவர்களால் கோப்பினை ஆய்வு செய்து (தேவைப்படின் கள ஆய்வு செய்து) காய்ந்த மரமாக இருந்தால் 2 நாட்களுக்குள் உயிருள்ள மரமாக இருந்தால் 15 நாட்களுக்குள் இறுதி ஆணை பிறப்பிக்கப்படும்.
5. இறுதி ஆணை பிறப்பிக்கப்பட்ட 3 நாட்களுக்குள் மனுதாரருக்கு தோராய செலவு தொகையை குறிப்பிட்டு கட்டுவதற்கு தாக்கீது வழங்கப்படும். (உயிருள்ள மரமாக இருந்தால் மட்டும்).
6. செலவுத்தொகை பெறப்பட்ட 7 நாட்களுக்குள் மரம் அகற்றப்படும். அதே நாளில் அதற்கு ஈடாக 10 மரங்கள் வேறு இடங்களில் நடப்படவேண்டும் அல்லது அகற்றப்பட வேண்டிய மரத்தை மாற்றி வேறு இடத்தில் நடப்படும். (இணைப்பு-2)
7. வட்டார துணை ஆணையர் அவர்கள் நிராகரிக்கும் பொருட்டு மனுதார்ர் துணை ஆணையர் (பணிகள்) / ஆணையர் அவர்களிடம் மேல் முறையீடு செய்யலாம்.

ஆணையாளர்

**<u>இணைப்பு - 1</u>**

## <u>சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள ஆபத்தான/இடையூறான மரம் அகற்ற கோரும் விண்ணப்ப படிவம்</u>

<table>
<tr><td>கோட்டம்:</td><td>மண்டலம்:</td><td>வட்டாரம்:</td></tr>
<tr><td>மனுதாரர் பெயர்: திரு/திருமதி/செல்வி</td><td>த/பெ:</td><td>வயது:</td></tr>
<tr><td colspan="3">சாதாரணமாக குடியிருக்கும் முகவரி:</td></tr>
<tr><td colspan="2">அகற்றப்பட வேண்டிய மரம் உள்ள முகவரி:</td><td></td></tr>
<tr><td colspan="2">மரத்தின் பெயர் மற்றும் அளவு:</td><td></td></tr>
<tr><td colspan="2">மரத்தின் தன்மை உயிருள்ளது/பட்டுப்போனது:</td><td></td></tr>
<tr><td colspan="3">மரத்தின் புகைப்படம்</td></tr>
<tr><td colspan="2">1. அகற்றவேண்டிதற்கான காரணம்:<br>அ.<br>ஆ.<br>இ.<br>ஈ.<br>உ.</td><td></td></tr>
<tr><td colspan="2">2. இதர விவரங்கள்:</td><td></td></tr>
<tr><td colspan="2">இடம்: சென்னை<br>நாள்:</td><td>மனுதாரர் கையொப்பம்</td></tr>
</table>